சிவமயம்

gistered as a News paperin Ceylon

P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு ஐப்பசிமீ உ0உ (1946 நவம்பர் 5 செவ்வாய்க்கிழமை) [இல ருகூ

# உண்மை தானா?

## உணவுப்பொருள் விஷயமாகப் பிரதம காரியதரிசி

சென்ற புதன்கிழமை அரசாங்க சபையிலே வேலைநிறுத்த விஷயமாக நடந்த விவாதத்தின்போது பிரதம காரியதரிசிசேர்ஶுபர்ட் ட்ரெயிற்றன் வேலைநிறுத்தக்காலத்திலே இந்நாட்டு மக்களுக்கு வழக்கம்போல உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன என்று கூறினார். பிரதம காரியதரிசியின் இக்கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்பதை இந்த இலங்கை மக்கள் அனைவரும் அறிவர். பிரதம காரியதரிசியின் கூற்று உண்மையல்ல.

இந்த யாழ்ப்பாணத்தில் வழக்கமாகக் கொடுக்கப்பட்டுவந்த மா கொடுக்கப்படவில்லை. சீனி அரைப்பாகத்துக்குக் கொடுக்கப்பட்டது. எனவே வழக்கம்போல உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டனவென்று பிரதமகாரியதரிசி — ஓர் பொறுப்புள்ள பிரதம அதிகாரி—எப்படிக் கூறமுடியும்? பிரதம காரியதரிசியின் நோக்கம் இப்போதுள்ள மந்திரசபையை ஆதரிப்பதே; ஆனால் பிரதமகாரியதரிசியல்ல அவரைப்போன்ற எத்தனையோ மேதாவிகளாலும் இந்த மந்திரசபையை இனிக் காப்பாற்றமுடியாது. ஓர் சில நாட்களுக்குள் இந்நாட்டை அல்லோலகல்லோல நிலைக்குக் கொண்டுவந்த இவர்களா ஓர் பெரிய நெருக்கடியைச் சமாளிக்கக் கூடியவர்கள்? இந்த மந்திரசபை வெளியேறவேண்டிய காலமும் வந்துவிட்டது. புலுடாக்களாலும், பூச்சுமொழிகளாலும் இனி ஏமாற்றமுடியாது.

## வெளியே போ!

### நேசப் படைகளுக்கு ஆஸ்திரிய கேள்வி

ஜெர்மனியும் அதன் நேச நாடுகளும் தோற்கடிக்கப்பட்டபின், இங்கிலாந்து அமெரிக்கா, ருஷியா, பிரான்ஸ் முதலாம் வெற்றியடைந்த நாடுகள் மேற்சொன்ன ஜெர்மன் நாடுகளில் தங்கள் படைகளைக் குவித்திருக்கிறார்கள்.

இந்தப்படைகள் இருப்பது தனது கௌரவத்துக்கும் அந்தஸ்திற்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாக இருக்கிறது. எனவே அவை உடனே விலகிவிட வேண்டும் என்று ஆஸ்திரியா இன்று கேட்கிறது.

சென்ற புதன்கிழமை ஆஸ்திரியப் பாராளுமன்றம், 1918ம் ஆண்டுக்குப்பின் முதன்முறையாகக் கூடி மேலே சொல்லப்பட்ட அபிப்பிராயத்தை வற்புறுத்தி ஓர் தீர்மானமும் நிறைவேற்றி அதனை நேச நாடுகளுக்கு அனுப்பியுள்ளது.

# வேலை நிறுத்தம்

## அரசாங்கசபை விவாதம்

சென்ற புதன்கிழமை நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்தில் மிஸ்ரர் T. B. ஜயா, சமீப காலத்தில் நிகழ்ந்த வேலைநிறுத்தம் சம்பந்தமாக ஓர்பிரேரணையை எடுத்தாண்டார். குறித்த வேலைநிறுத்தத்தினுல் ஊரவர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர்; இந்த வேலைநிறுத்தம் வரமுன்னர், அரசாங்கம் என்னவிதமான பாதுகாப்பு நடைவடிக்கைகளைக் கையாண்டது? தொழிலாள நடைய அதிருப்தியைப் போக்கடித்து, இனியும் இப்படியான சம்பவங்கள் நிகழாவண்ணம் அரசினர் தக்க ஒழுங்குகளைக் கையாளவேண்டும் என்பதே மிஸ்ரர் ஜெயாவின் பிரேரணைச் சாரம்.

குறித்தபிரேரணையை எடுத்தாளும்போது, அரசாங்கம் ஆற்றிவந்துள்ள வழவழாக் கொள்கையை மிஸ்ரர் ஜயா கண்டித்தார். அரசாங்கம் கண்மூடித்தனமாக இருக்காமல் தொழிலாளருடைய கோரிக்கைகளை நீதியாகத் தீர்த்திருந்தால் இந்தத் துக்ககரமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கமாட்டா; தேசாதிபதி இதில் தலையிட்டு இப்பிணக்கைச் சமாசமாகத் தீர்த்துவைக்காவிட்டால் நிலைமை மிகவும் கேவலமாக முடிந்திருக்கும் என்று கூறினர்.

ஸ்ரீமான்சு.நடேசன் பிரேரணையை ஆதரித்தார். மிஸ்ரர் தகநாயக்கா, மந்திரசபையினரும் அரசாங்கமும் இதுகாறும் கேவல முறையிலேயே கருமம் ஆற்றிவந்திருக்கிறது என்றும், டக்ரர்என். எம். பெரீராவைச்சிறைசெய்தது தமக்குத் தெரியாது என்று உள்நாட்டு மந்திரி கூறியபோதிலும் தமக்கு அவர் கூற்றில் நம்பிக்கையில்லை என்றும் கூறினர்.

உள்நாட்டு மந்திரி ஸ்ரீ மகாதேவா பொலிசார் டக்ரர்பெரீராவைச் சிறைசெய்தது தமக்குத் தெரியாது என்று ஏற்கெனவே தான் தெரிவித்ததை மிஸ்ரர் தகநாயக்கா ஆட்சேபித்துத் தாம் பொய் சொல்வதாகக் கருதுவது முறையில்லையென்று சபைத் தலைவர்க்கு அறிவித்தார்.

சபைத்தலைவர் மிஸ்ரர் தகநாயக்கா அப்படிக் கூறவொண்ணுது என்று விதித்தார்.

பிரதம காரியதரிசி,மிஸ்ரர் டி. எஸ். சேனநாயக்கா,மிஸ்ரர்பண்டாரநாயக்கா முதலியோர் அரசாங்கத்தின் சார்பாகப் பதில் இறுத்தனர். விவாதம் இன்னும் முடியவில்லை, சபைக்கூட்டம் 12-11-46 க்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

# பக்திவலைப்படும் பரமபதி

(பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சரக் குருக்கள்)

இவ்வுலகத் தோற்றத்திலே சிறந்த மனிதர்களுள் நற்கதிகூட்டுஞ் சைவமாஞ் சமயஞ் சாருமூழடைழந்த சைவர்களாகிய நாங்கள் பிறவிப் பயனையடைய முயலுதல் இன்றியமையாதது. அம்முயற்சிக் குரியனவாகவே நித்திய கருமங்களும் ஆலய வழிபாடும் அமைந்திருக்கின்றன. அவற்றை அவமதித்தலும், முறைபிறழ்ந் தனுசரித்தலும் அறியாமையும் உய்தியில் குற்றங்களாம். ஆகையால் நவநாகரிகப் புரட்சியினுள்ளே முற்றும் அழுந்தாது தொன்மை மறவாது நாமொவ்வொருவரும் சமயக் கல்வியையும் ஆசாரங்களையும் பொன்னேபோற் போற்றுதல்வேண்டும். சைவ வினுவிடைகள், சைவபோதங்கள் முதலிய சிறு நூல்களையேனுங் கற்றுணர்ந்தவற்றின்வழி நிற்றல்வேண்டும். திருவாதவூரடிகள் "எக்கலையுங் கற்றுணர்ந்தா ரீரெட்டான் டெல்லையினி" லன்றோ! அவர் இளமையில் உத்தியோகக் கல்விமாத்திரங் கற்கவில்லையே. இளமையிற் கற்றிருந்த சமயக் கல்வியன்றோ வளர்ந்து மந்திரியான அவரைச் சிவமுறச் செய்தது என்பதனைச் சிந்தியுங்கள்!

இறை, உயிர், தளை என்னும் முப்பொருள் இயல்புகளை ஆராய்ந்தறிதல் சைவசமயிகளின் கடமையாம் என்னை? அறியார்க் கேனையர் உபதேசங்கள் பயன்றரா வாகலின். எந்தக் கருமஞ் செய்வோரும் அதுபற்றிய ஆராய்வற்றவராயின், விசுவாசமும் முறையும் பொருந்துமாறு அதனை அவர் நிறைவேற்றுவது துர்லபமாகும். அன்றி அதிற் குறைவும் விபரீதமும் ஏற்படவுஞ் செய்துவிடுவர். அவ்வாற்றானே அன்னன, காலாந்தரத்தில் மூடச்செயல், குருட்டுவழி என்பனபோன்ற நிந்தையுரைகளைப் பெறுதற் கேற்றவைகளாகின்றன. ஆதலால் "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத்தக" என்னுந் தமிழ்மறையைக் கடைப்பிடித்தொழுகுதல் நாம் செய்பத்தக்கதாகும்.

ஆன்ம ஈடேற்றத்துக்காக நாம் செய்யுங் கடவுள் வழிபாடு, அகம், புறமென இரண்டுவகைப்படும். சிவஞான யோகிகளினுலன்றி ஏனைய நம்போலிகளால் இலகுவாக அகப்பூசை செய்யக்கூடியதன்று. ஆயினும் அது மிகச் சிறந்தது. அதனை வழிப்படுத்தவே புறப் பூசனை செய்வோரும் மானச பூசைசெய்தே செய்யவேண்டும் என்பது. அத்தகைய சிவஞான பக்குவம் இல்லாதார் 'எல்லாம் பிரமம்' என்று கூறி மயங்கும் மாயாவாதிகள்போல யாவும் மனதில் என்று கூறிக்கொண்டு படிற்றொழுக்கம்பூணுதல் மேனிலையடைதற்கேதுவாகாது. புறப் பூசனையின் சார்பாகவே ஆலய வழிபாடமைந்தது. அவ்வாலய அமைப்பும் நடைமுறைகளும் சிவபக்தியையுஞ் சிவஞானத்தையும் தருவனவாக வுள்ளன. சிவமாகிய கடவுள் பஞ்சகிருத்திய முதல்வர். ஆயினும் அவருக்கு வேண்டியதொன்றுமில்லை. நாம் ஞளிர்காய்வதால் எரிந்துகொண்டிருக்கும் அக்கினிக்குக்குறைவு நிறைவு ஒன்றுமில்லையல்லவா? ஆதலால் ஆன்ம சுகங்கருதி வழிபடும் நாமும் வேத சிவாகம விதிகளாகிய கட்டளைகளை உணர்ந்து, அவ்வழி நின்று மேனிலை யடைதல்வேண்டும்.

"எண்டரு பூதமைத்து மெய்திய நாடி மூன்று—மண்டல மூன்றுமாகி மன்னிய புணர்ப்பினுலே—பிண்டமு மண்டமாகும் — பிரமனே டைவராக்—கண்டவர் நின்றவாறும் இரண்டினுங்காணலாமே" என்றவாறுநமது சரீரமும் அண்டமும் சமமாகும். அவ்வாறே ஆலயங்களும் சரீரப்பிரஸ்தாரமாகவும், இருதயப்பிரஸ்தாரமாகவும் அமைந்திருக்கின்றன இதுபற்றியே "உயிருடலனைத்து மீசன் கோயி" லென்பது. ஆலயங்களிலே யுள்ள இலிங்கம், நந்தி, பலிபீடம், பதி, பசு பாசங்களின் குறிப்பாகும். திருவாசி பிரணவமாம். மகோற்சவம் பஞ்ச கிருத்தியக் குறிப்பு. கொடியேற்றம் ஆன்ம திருவருட் சத்தியால் சிவப்பேறடையுங் குறிப்பு, இவ்வாறாக ஆலயமும் கிரியைகளுஞ் சிறந்த தத்துவார்த்தம் பொருந்தியுள்ளன. ஆகமங்களிற் காணப்படும் இவற்றின் பரப்பு விரிவஞ்சி விடப்படுகின்றன. ஆனல் 'ஊனெடுத்துழலு மூமாதவி'னும் ஒன்றையுஞ் சிந்தித்து உணராது கண்ட பாவனையிற் கொண்டை முடித்து நரகத்துக்காளாகின்றனம். அந்தோ பரிதாபம்.

ஆலயக் கிரமத்தில் அவதானிக்க வேண்டியன பலப்பல உண்டு. அவற்றுட் காலவிசேடம் பிரதானமானது. காலந்தவறிச் செய்வனவற்றால் நற்பயன் மிகக் குறைவு. சூரியோதயாதி பத்துநாழிகை பூருவான்னம். மேற் பத்து நாழிகை மத்தியான்னம். அதன்மேற் பத்து நாழிகை சாயான்னம். இரவு முதல் ஏழரை நாழிகை பிரதோஷம். மேல் மூன்றேமுக்கால் நாழிகை அர்த்தயாமம். மேற் பத்து நாழிகை மத்தியராத்திரம், இரவின் இறுதி மூன்றேமுக்கால் நாழிகை உஷத்காலம். இக் காலங்களிற் செய்யவேண்டிய பூசனை முதலியவைகளை மற்றைக் காலங்களிற் செய்யும்படி மாற்றக் கூடாது. உரிய காலத்திலே பூசை முதலியனவைகளைச் செய்து நற்பயனை அடைதல் வேண்டும். விபரீதமான பிரதிமாலங்காரங்கள் செய்தலுஞ் செய்வித்தலுங்கூடாது. உபசாரங்களைப் பயபக்தி இன்றியும் ஏற்ற அளவு இன்றியும் அபசாரங்களாகச் செய்தல் கூடாது, காமம் வெகுளி மயக்கந் தருவனவற்றைத்தவிர்த்தல் வேண்டும் என்பன முதலாய (ஆலயக்) கிரமங்களை இனிது நடைபெறச் செய்வதனுலேயே நன்மையுண்டாகும். ஒருவர், இருவர் மாத்திரம் அல்ல, ஆசாரியர், அத்தியட்சகர், அர்ச்சகர், உபயகாரர் வழிபடுவோர் ஆகிய யாவரும் ஆலயக் கிரமங்களை அவதானித்து நடத்தல் வேண்டும். ஆதலின் குறைகூறுதல் விடுத்து நல்வழிப்படுத்த முயல்வோமாக. அதற்கும் அன்புஞ் சிரத்தையும் ஆசாரமும் பொருந்தவேண்டும்.

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு.
ஐப்பசிமீ உ௰உ செவ்வாய்க்கிழமை

## புடைவைப் பஞ்சம் நேருமா?

இப்பொழுது இலங்கை மக்கள் வசம் இருக்கும் புடைவைக் கூப்பன்களுக்குப் போதிய அளவு புடைவை கொடுப்பதற்குப் புடைவை யில்லையெனவும், இரண்டாம் அயனத்திற் சனங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்ட புடைவைக் கூப்பன்களுட் பாதிக்கு மேற்பட்ட விகிதம் இப்பொழுதும், கடையிற் புடைவை யில்லாமையினுல் ஊரவர் கையிலேதான் இருக்கின்றனவெனவும், அடுத்துவரும் டிசெம்பர் மாசத்தில் நிகழவிருக்கும் நத்தார்க் கொண்டாட்டத்திலே இங்குள்ள மக்கள் போதிய புடைவை துணியில்லாமற் சங்கடப்படவேண்டி நேருமெனவும் இலங்கைப் புடைவைக் கட்டுப்பாட்டதிகாரியாகிய மிஸ்ரர் எட்மன்ட் ரெட்றிக்கோ இப்பொழுது தெரிவிக்கின்ருர்; இதனுல் வருகிற டிசெம்பர் மாசம் முதற்றேதியில் இலங்கை மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க எண்ணியிருந்த புடைவைக் கூப்பன்களை இன்னமும் பிந்தியே கொடுக்கவேண்டி ஏற்படுமென யோசிக்கக் கிடக்கிறதென்றும் மிஸ்ரர்ரெட்றிக்கோ தெரிவிக்கின்ருர்;

புடைவை துணிப் பஞ்சம் இலங்கையிலே வர வர அதிகரிப்பதற்குக் காரணம் இந்தியாவிலிருந்து முன்னரைக் காட்டிலும் குறைந்த விகிதப்படி புடைவை தானும் இலங்கையின் பொருட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றது; இங்கிலாந்து வாக்களித்த அளவிற்கு இலங்கையின் பொருட்டுத் துணியனுப்ப முடியாத நிலைமையில் இப்பொழுது இருக்கிறதாம்; இங்கிலாந்திலே அதிக புடைவை துணிகளை ஆக்குவதற்கான போதிய கைத்தறிகள் கிடைக்கவில்லையென்று அங்குள்ள நெசவுத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனராம்.

கட்டுப்பாட்டுத் தலைவருடைய செயல் இவ்வளவிலிருக்க, புடைவை வியாபாரிமார்சங்கத்தினர் தாங்கள் ஒல்லாந்து முதலிய நாடுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் சேலை துணிகள் போதிய அளவிற்குத் தருவித்தல் முடியுமென்றும், இலங்கைப் புடைவைக் கட்டுப்பாட்டதிகாரிகளின் நிபந்தனைகள் கடுமையாக இருப்பதனுல் தாங்கள் நினைத்தபடி புடைவை துணிகளை வேற்ஞர்களிலிருந்து தருவித்துக்கொள்ள முடியவில்லையென்றும், இதனுல் இலங்கைக்கு வரக்கூடிய புடைவைகள் பர்மா முதலிய வேறு நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து அனுப்பப்படலாயின வென்றும், சென்றவாரம் தாங்கள் கூடிய கூட்டத்திலே முறையிட்டுள்ளார்கள்; ஆனுல் யாராயிருந்தாலும் புடைவை வியாபாரிகள் எந்த நாட்டிலிருந்து புடைவைகளை இங்கே தருவிப்பதற்கு முயற்சி செய்யினும் தாமும் அவர்களுச் செய்யக்கூடிய உதவிகளெல்லாஞ் செய்யச் சித்தமாக இருப்பதாக மிஸ்ரர் ரெட்றிக்கோ இப்பொழுதுகடைசி நேரத்தில் வாக்குறுதி கூறுகின்ருர்;

இப்படியானுல் இப்பொழுது செய்வதென்ன? இலங்கை மக்களெல்லாரும் நிர்வாண நிலைமையை அடைந்தபின்பா புடைவை தருவித்தற்கு எங்கள் அதிகாரிகள் முயற்சி செய்யப்போகிருர்கள்? வெள்ளம் வருவதற்கு முன்னே அணைகோலி வைக்கவேண்டுமென்ற இந்தச் சிந்தனையற்ற அதிகாரிகட்கு எத்தனை முறை எடுத்துத் தெருட்டினுலும், கெடுகுடி சொற்கேளாதென்றவாறு, இவர்கள் கேட்கமாட்டார்களே! புடைவைக் கட்டுப்பாட்டு அதிகாரி போன்ற அதிகாரிகளும், மந்திரிமாரும் எந்த நேரமும் இழவு சொல்வதற்கா, ஆயிரக் கணக்கில் மாசவேதனம் வாங்கிக்கொண்டு உங்கேயிருக்கிருர்கள்? இலங்கையிலுள்ள தமிழ்மக்களின் பிரதானகொண்டாட்ட காலமாகிய தீபாவலிக் காலத்திலே இந்த மக்கள் உடுத்தற்குப் போதிய துணி கொடுக்க இயலாமல் இடர்ப்பட்ட அதிகாரிகளும் மந்திரிமாரும், மூன்று மாசம் பிந்தி வருகிறதாகிய நத்தார்க் கொண்டாட்ட காலத்திலும் இங்குள்ள மக்களுக்கு வேண்டிய உடுக்குந்துணி கொடுக்கச் சத்தியற்றவர்களெனக் கண்டால் இவர்களை இங்கே ஏன்? அங்கேதானேன்? இந்தியாவிலுள்ள அதிகாரிகளும் மந்திரிமாரும் இப்படித்தான் செய்கிருர்களோ?

உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதியிலே, ஒரு மந்திரியும் அவருக்கு ஒரு நிர்வாக சபையும், ஒரு அதிகாரியும் பல நூற்றுக்கணக்கான உத்தியோகத்தர்களுமிருக்கிருர்கள்; இவர்களுக்கெல்லாம் கொழுத்த மாச வேதனம் அளிக்கப்பட்டு வருகின்றது; இவர்கள் செய்வதென்ன? உணவுப் பொருள் வேற்று நாடுகளிலிருந்து வந்தாற் கொடுப்பார்கள்; காலதாமசமாகக் கப்பல் வருமென்ருல், அதனைத் தெரிவிப்பார்கள்; உணவுப்பொருள் முட்டுப்பட்டால், முட்டுப்பட்ட பொருளைத் தவிர்த்து உள்ள உணவுப் பொருள்களைப் பங்கிடுவார்கள்; ஆனுல் தாம் பங்கிட்டுக்கொடுக்கும் பொருள் ஒரு சீவனுக்கு கிழமையில் ஒருநாளைக்குத்தானும் வயிருர உண்ணப் போதுமோ என்பதை மாத்திரம் சிந்திக்கமாட்டார்கள்; இதுவருஞ் செய்யக்கூடியதுதானே? செயற்கரிய செய்வாரல்லரா பெரியர்?

இப்படியே இந்த உடைப் பொருளிலும் மந்திரிமாரும் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கருமம் பார்த்து வருகிருர்கள்; ஒருபோது தாங்கள் போதிய உ[illegible] உடையையும் இலங்கை [illegible] காலந்தோறும் உதவா விட்டாலும்,

# இந்திய அரசியல்

## மா வருகிறது!

### நிலைமை திருப்திகரமாம்!

அரை இருத்தல் மா 17-ந் திகதி வரைதான் கொடுக்கப்படும் என்று முன்னர் ஓர் செய்தி வெளிவந்தது குடியேற்றநாட்டு மந்திரி வேறோர் தேசத்துக்குப் போகவிருந்த மாக் கப்பல்ஒன்றை இலங்கைக்குத்திருப்பி விட்டார். இதன்பயனுக ஆளுக்கு அரை இருத்தல் மா விநியோகிக்கப் படுவது டிசெம்பர் 15ந் திகதிவரை நடைபெறும். அதன்பிறகு போதிய மா ஆஸ்திரேலியா முதலாம் நாடுகளில் இருந்து வருமாம்.

அரிசி இருப்புத் திருப்திகரமாக இருக்கிறது. இப்போதுள்ள ஒன்றரைப்படி அரிசி விகிதம் தொடர்ந்து கொடுக்கப்படும் என்று உணவுப்பகுதிப் பிரதம அதிகாரி திரு. கே. வைத்தியநாதன் அவர்கள் தெரிவிக்கிருர்.

கஸாவிப்பருப்பு, கடலை முதலாம் தானியங்கள் ஏராளமாக இருப்பில் இருக்கின்றன. எனவே முன்னர் எண்ணியபடி இப்போது கவலையுறத் தேவையில்லை என்று திரு. வைத்தியநாதன் கூறுகிருர்.

---

அந்த மக்கள் சோரவியாபார முறையில் உணவுப் பொருளும் உடையுந் தேடி உண்டு உடுத்துக் காலங் கழிப்பார்கள் தாமே யென மேலே சொல்லப்பட்ட மந்திரிமாரும் அதிகாரிகளும் அவரைச் சேர்ந்தவர்களும் தங்கள் மனசைச் சமாதானம் பண்ணிக்கொண்டிருக்கிருர்கள் போலும்; ஆனுல், இந்த அந்தரமான நிலைமையில்வைத்து இலங்கை மக்களை இன்னமும் எவ்வளவு காலத்திற்கு ஆளப்போகிருர்களோ, நாம் அறியேம்; தெய்வம் அறியும்.

*

## பாயாத வெள்ளம்

சென்ற வெள்ளிக்கிழமை பகலும் இரவும் பொழிந்த பெருமழைகாரணமாக, யாழ்ப்பாணப் பட்டினத்தின் சில பாகங்களிலே வெள்ளம்ஓடமுடியாது தடைப்பட்டு நின்று பெருக, குடியிருக்கும் வளவுகள் சிலவற்றில் வெள்ளம் புகுந்து, வீட்டுக்காரரின் அநுமதியில்லாமல், அவர்களுடைய வீடுகளுள்ளும் புகத் தலைப்பட்டுவிட்டது. இதனுல் வீடுடையவர்கள் அப்போதைக்காயினும் தங்கள் வீட்டிலுள்ள பொருள்பண்டங்களையும், நிற்கும் ஆடுமாடுகளையும் அகற்றிக்கொண்டு மழையில் நனைந்தபடி திடரான இடங்களிலும் வெள்ளம்புகாத வளவுகள் வீடுகளிலும் குளிரால் நலிந்து நடுங்கிய வண்ணம் போய்ச் சேரவேண்டிநேர்ந்தது. இப்படி அந்த நேரத்திற் கஷ்டப்பட்ட இடங்களுள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கணித்தான வளவுகளும் பலவுண்டு; பிராமணர், வேளாளர் முதலியோர் இவ்வளவுகளிலே குடியிருக்கின்றனரெனினும், இந்த வளவுகள் பள்ளவளவுகளாயிருத்தலினுற்ருன் ஆண்டுதோறும் பெருமழை பெய்யும்போது இப்பகுதியிற் குடியிருக்கும் மக்களுக்குப் பெருவெள்ளத்தினுற் பேரனர்த்தங்கள் நேர்ந்துவருகின்றன. ஆனதால் எங்கள் பட்டினப் பிதாக்கள் இப்படி வெள்ளத்தோடு கூடிய சமயத்திலே இந்த இடங்களை நேரே வந்து பார்த்து, பெருமழை பெய்து வெள்ளம் பெருகுங் காலங்களில் வெள்ளம் தடைப்படலின்றிப் பாய்தற்கான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்; இல்லையேல் இந்தப் பகுதியிலே பெருமழை பெய்யாது தடுத்துவிடல்வேண்டும்.

### வங்காளத்திற்குக் காந்திஜி விஜயம்:

மகாத்மா காந்தியடிகள் கிழக்கு வங்காளத்திற்கு விஜயம் செய்து, அங்கு வகுப்புக் கலவர நிலைமையை அவதானித்து வருகிருர். அவர் அங்கே புறப்படமுன், வங்காளத் தேசாதிபதி சேர். பிரடெரிக் பரோஸ் என்பவரையும் சந்தித்து நிலைமையைப் பற்றிச் சம்பாஷித்தார். வங்கப் பிரதம மந்திரி மிஸ்ரர் ஸுஹராவர்த்தியும் மகாத்மாவைக்கண்டு வகுப்புக் கலவர விஷயாகத் தமதுநிலைமையை விளக்கினுர்.

*  *

### மதமாற்றம்:

கிழக்கு வங்காளத்திற் பெருந்தொகையான ஹிந்துக்களை முஸ்லீம்கள் பலவந்தமாகத் தம்மதத்திற்கு மாற்றிவிட்டனர். இப்படி மதம்மாற்றப்பட்டவர்களைப் பழையபடி ஹிந்து மதத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் ஆற்றப்படுகின்றன. பிரபல ஹிந்து ஆதீனகர்த்தாவான ஸ்ரீமத் கோஸ்வாமி ஸ்ரீ கிருஷணஜிலானி அவர்கள் இவ்விஷயமாகக் கிழக்குவங்காளத்துக்கு விஜயம் செய்துள்ளார். இதற்கான பிராயச்சித்தத்துக்கு அதிகம் செலவோ, சிரமமோ இல்லையென்றும் பஞ்சகவ்விய மூலமாகப் பிராயச்சித்தம் கொடுத்து அவர்களை மீண்டும் ஹிந்துமதத்திற்குச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் ஸ்ரீ கோஸ்வாமி தெரிவித்தார்.

*  *

### ஸ்ரீதன வழக்கம் ஒழிக:

ஸ்ரீதன வழக்கத்தை ஒழிப்பதற்குச சென்னை அரசாங்கம் ஆலோசிக்கிறது. மணமகன் மணமகளுக்காகக் கொடுக்கும் பணமோ, மணமகளுக்காகச் ஸ்ரீதனமாகக் கொடுக்கப்படும் பணமோ 2000ரூபாவுக்கு மேற்படக்கூடாது என்ற ஓர் சட்டத்தைக் கூடிய விரைவில் சென்னை அரசாங்கம் கொண்டுவரும் எனத்தெரிகிறது.

*  *

### தேசாதிபதிகள் ஒழிக:

இந்தியா பூரண சுதந்திரமடைந்தும் இப்போதுள்ளதுபோல, மாகாணந்தோறும் தேசாதிபதிகள் இருக்கவேண்டியதில்லை என்று பண்டித ஜவஹர்லால் நேரு சென்ற வாரம் கூடிய இந்திய மத்திய சட்டசபையில் ஓர் கேள்விக்குப் பதில் இறுக்கையிற் கூறினுர்: தேசாதிபதி எனனும் பதவி வீண் பணச் செலவுக்கேதுவாகும். அது அதிகாரமோகத்தை வளர்ப்பதாகும் என்பதே பண்டித நேருவின் சித்தாந்தம்.

*  *

### அணுக்குண்டு ஆராய்ச்சி

இந்தியாவில் தக்க விஞ்ஞானிகள் மேற்பார்வையில் அணுக்குண்டு சம்பந்தமான ஆராய்ச்சிகள் இப்போது நடாத்தப்படுகின்றன. பேராசிரியர் எச். ஜே. பாபா என்பவர் இந்த ஆராய்ச்சிகளை நடத்தும் விஞ்ஞானிகள் கோஷ்டிக்குத் தலைவராவர்.

*  *

### அங்கத்தவர்களின் வங்காள விஜயம்

இடைக்கால அரசாங்க அங்கத்தவர்களில் பண்டிதர்நேரு, மிஸ்ரர் லியாகத் அலிகான், மிஸ்ரர் அப்துல் ரூப் நிஷிட்டர், சர்தார் வல்லபாய் படேல் என்னும் நால்வரும் சென்ற வாரத்திறுதியில் ஆகாசவிமானமூலம் கல்கத்தாவுக்குச் சென்று நிலைமையை விசாரித்தனர்.

*  *

### லீகர்மீது குற்றச்சாட்டு

சென்ற ஆகஸ்டுமாதம் முஸ்லிம்லீக் நேரடிப் போராட்டதினமாகிய 16ம் திகதி வகுப்புக்கலவரங்களைத் தூண்டி கலகம் விளைத்தனர் என அஸாமில்

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் என்பது அசங்கதமானதா?

## பௌத்த குரவரும் அரசியலும்

### அவர்கள் ஏன் பிரவேசிக்க வொண்ணாது?

மிஸ்ரர் சேனநாயக்காவின் பௌத்தமதப் பற்று | மதுபான விருத்தியும் பௌத்த தர்மமா?

### அரசியல்வாதிகட்கு ஓர் ஆலோசனை

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

பௌத்த குருமாரில் பெரும்பான்மையினர்க்கும் மிஸ்ரர் சேனநாயக்காக் கோஷ்டியினர்க்குமிடையே இப்போது சிலகாலமாக அபிப்பிராய பேதம் ஏற்பட்டு பரஸ்பரம் பிணக்கு உண்டாகியிருக்கிறது. பௌத்த குருமாராக வுள்ளவர் அரசியலில் ஈடுபடக்கூடாது; அது பௌத்த மதத்துக்கே விரோதமாகும் என்று மிஸ்ரர் சேனநாயக்காவும் மிஸ்ரர் கொத்தலாவலையும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் சொல்லிக்கொண்டே வருகின்றனர். அரசியல் ஓர் அசங்கதமான விஷயம். அப்படிப்பட்ட ஓர் விஷயத்தில், பரிசுத்தவான்களாகவிருக்க வேண்டிய பௌத்தகுருமார் தோய்ந்து தம்மை அசுசிப்படுத்தவொண்ணாது: அவர்கள் புத்ததர்மத்தை ஊரவர்க்குப் போதிப்பதிலேயே தம் நாட்களைக் கழிக்கவேண்டும் என்னும் இன்னோரன்னவற்றைத் தம் நியாயங்களாக சேனநாயக்கா குழுக் கூறுகிறது. வெள்ளாடு நனைய வேங்கைப்புலி விம்மிவிம்மி அழுததாம்!

●

அசங்கதமானது?

அரசியல் அசங்கதமானதல்ல! நாட்டுமக்களைப் பரிபாலித்து அவர்கள் தங்கள் வாழ்க்கையைச் செவ்வனே நடாத்த உதவிசெய்வதே அரசியலாகும். பிரஜைகளாயுள்ளார் சன்மார்க்கநெறி பூண்டுவாழ உதவி செய்வது அரசியலின் நோக்கம். எனவே, அதுஎப்படி அசங்கதமானதாகும்? இந்த இலங்கையிலே அது அசங்கமானது என்றால் அதனை இங்கிலைக்குக் கொண்டுவந்தவர்களே அதற்குப் பொறுப்பாளிகளாவர். இலங்கையில் அரசியல் வாழ்க்கையை இக்கேவலநிலைமைக்கு, அசங்கதமான நிலைமைக்குக்கொண்டு வந்தவர்கள் சேனநாயக்கா கோஷ்டியினர் என்பதே எமது சித்தாந்தம்: இவர்கள் சென்ற 15 ஆண்டுகளாக அரசியற் பொறுப்பைத் தாங்கி "ஜனநாயக ஆட்சி"யை அமுல் நடத்தி வந்திருக்கின்றனர். அதனால் விளைந்தபயன் என்ன? பொருளாதார விஷயமாக, அரசியல் விஷயமாக, கல்விஷயமாக நாம் இன்னும் பிற்போக்குநிலையிலேயே இருக்கிறோம்: ஓர் அசங்கதமானநிலை ஏற்பட்டுத்தான் இருக்கிறது என்பதை எவரும் ஒத்துக்கொள்வர். இந்த அசங்கதமான நிலைமையைப் போக்கி: அரசியல் வாழ்க்கையினைப் பரிசுத்தமாக்க வேண்டும். அந்த நல்ல கைங்கரியத்தைச் செய்வதற்குப் பௌத்த குருமார் ஏன் முன்வரக்கூடாது?

●

அரசியல் நெருப்பு

அரசியல் நெருப்புப் போன்றது என்று கூறினும்பொருந்தும். நெருப்பின் உதவியினால் மக்கள் தம் பசிப்பிணி போக்கவும்; வெளிச்சம் ஆக்கவும் இன்னும்பல நல்ல கைங்கரியங்கள் ஆக்கவும் முடியும். ஆனால் அதே நெருப்புக் குரங்கின் கையிற் சிக்குமானால் விளைவது சர்வ நாசந்தான்.

அதே போலத்தான் அரசியலும்: ஜெர்மனியிலே அந்த அரசியல் அதிகாரம் ஹிட்லர்: போன்றவர்களின் கைக்குவந்து விளைந்த பயனென்ன? லட்சக்கணக்கான மக்கள் இறந்தனர்: கோடிக்கணக்கான பொருள்கள் சேதமடைந்தன, ஹிட்லர் ஆற்றிய செயல்களின் அதிர்ச்சி இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆகவே அரசியல் நன்மைவிளைப்பதும் தீமைவிளைப்பதும் அதனை நடத்துவோர் கையில் தங்கியிருக்கிறது. இந்த உண்மையை உணராது அரசியல் ஓர் அசங்கதமான விஷயம் என்று கூறுதல் பொருந்தாது. அன்பை, அகிம்சையை, பரந்த நோக்கத்தை, சமரச மனப்பான்மையை ஆதாரமாகக் கொண்டுள்ள அரசியல் நிறுவப்படல் வேண்டும். எவ்வுயிர்க்கும் அன்பாயிரு என்றார் புத்தர்பெருமான். அந்த உபதேசத்தை மேற்கொண்டுள்ள பௌத்த குருமார் தம் போதனைகளைக் கிரியா முறையிற் செய்ய, இப்போதுள்ள உலகநிலையில் அரசியலிற் பங்குபற்றத்தான் வேண்டும்.

●

பௌத்தமத அபிமானமா?

மிஸ்ரர் சேனநாயக்காவும் கொத்தலாவலையும் தாம் வைதிக பௌத்தர், என்றும் பௌத்த தர்மத்தைக் காப்பதே தங்கள் நோக்கம் என்றும் பலபடச் சமயம் வாய்க்கும் போதெல்லாம் கூறிவருகின்றனர். இது அவர்களின் கண்துடைப்பு வித்தை. இன்று மிஸ்ரர் சேனநாயக்காவின் பரிபாலனத்தின்கீழ் உள்ள விவசாயப் பட்டாளத்தில், அவர் வகுத்துள்ள கைங்கரியங்கள் பௌத்த தர்மத்துக்கு ஒத்தனவா? இப்பட்டாளத்துத் தலைமைத் தானத்திலே அங்குள்ள உத்தியோகத்தரின் பொருட்டு ஓர் மதுபானக் கடையை அரசாங்கமே நிறுவியிருக்க வில்லையா? இந்த மதுபானக்கடை இருப்பது மிஸ்ரர் சேனநாயக்காவுக்குத் தெரியாது என்று கூறமுடியுமா? இன்றும் இந்த விவசாயப் பட்டாளத்துச் சேவகர்க்கு மாட்டின் மாமிசம் முதலியன கொடுக்கப்படுகிற தில்லையா? இவையெல்லாம் பௌத்த தர்மத்துக்கு இசைந்தனவா என்று கேட்கிறோம், மிஸ்ரர் சேனநாயக்கா இப்படியான முறைகளினால்தான் பௌத்த தர்மத்தைப் பாதுகாக்கப் போகிறாரா? பௌத்த தர்மத்துக்கு முழுமாறான கருமங்களை ஆற்றிவிட்டு மிஸ்ரர் சேனநாயக்கா பௌத்த 'குருமார் அரசியலில் ஈடுபடுவதைக் கண்டு வெகுள்வதும் ஏனோ? சிலரைப் பலகாலத்துக்கு ஏமாற்றலாம்; பலரைச் சிலகாலத்துக்கு ஏமாற்றலாம்! ஆனால் எல்லாரையும் எக்காலத்தும் ஏமாற்ற முடியாது.

●

கட்சிகள் பெருக்கம்

பாராளுமன்றத்துத் தேர்தற்காலம் நெருங்க நெருங்க அரசியற்கட்சிகளும் கா...

தொடர்ச்சி ...ம் பக்கம்

## சீனாவின் நிலைமை

### சமதர்மிகளின் எதிர்ப்பு

உலகத்துவல்லரசுகளில் ஒன்றாக இன்று விளங்கவேண்டிய சீனம் உள்நாட்டுக் குழப்பங்களால் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான நிலைக்கு வந்துவிட்டது. ஒருபக்கம் ருஷியா, மற்றோர்பக்கம் அமெரிக்கா அந்நாட்டுக்குள் இருந்து பிரிவினையை உண்டாக்கி, உள்நாட்டுக் கலகத்துக்கு ஏதுவாக நிற்கின்றன சியாங்கே ஷெயிக்கின் தலைமையில் சீனத்தில் ஓர் அரசாங்கம்இருக்கிறது. இதன் அதிகாரத்தைச் சீன சமதர்மிகள் ஒப்புக்கொள்ளாது சதா கலவரம் விளைக்கிறார்கள். இரு கட்சிகளும் லட்சக்கணக்கில் படைகளைத் திரட்டி பரஸ்பரம் போர்செய்து வருகின்றன. இது நேற்றுஇன்று மூளைத்த கலவரமல்ல. ஆண்டுக்கணக்காக இந்த விபரீதம் அந்த நாட்டில் இருந்துகொண்டேயிருக்கிறது.

இந்த இரு கட்சிகளுக்குமிடையேயுள்ள பிணக்கை ஒழிக்கச் சென்ற சிலநாட்களாக முயற்சி செய்யப்பட்டது அந்த முயற்சி பிரதிகூல மடைந்துவிட்டது என்று ஓர் செய்தி கூறுகிறது. எனவே இனி உள்நாட்டுக் கலகங்கள் அந்நாட்டில் மீண்டும் மும்முரமாக ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம்.

## அராபியர் கோபம்

### அமெரிக்க ஜனாதிபதிமீது ஆத்திரம்

பலஸ்தீனத்திலே 1 லட்சம் யூதரைக் குடியேற்றவே வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் மீண்டும் வற்புறுத்தி அறிக்கை விட்டிருப்பது அராபியர்க்கு ஆத்திரம் விளைத்திருக்கிறது. பலஸ்தீன அரபுச் சபையின் காரியதரிசியான டக்ரர் ஹூஸேன் காலிதி என்பவர் ட்ரூமனுடைய அறிக்கையைக் கண்டித்துப் பின்வருமாறு கூறினார்:

"ஜனாதிபதி ட்ரூமனின்அறிக்கை அராபியராகிய எம்மைப் போருக்கு அழைப்பதையொக்கும் எங்க அவருக்குத் தக்க மறுமொழி கொடுக்கவேண்டியது எம்மெல்லோரதும் கடமையாகும்.

"யூதரைத் தட்டிக்கொடுக்கும் இந்த 'யூத' ஜனாதிபதிக்கு நாம் இங்கே புனுடாப்பண்ணவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும்.

"இந்த ஏகாதிபத்திய வெறிபூண்ட குழுவினர்க்கு எந்த விதத்தில் நாம் விளங்கப்படுத்த வேண்டுமோ, அந்த விதத்திற் கருமங்களை ஆற்றி விளக்க வேண்டும். நாங்கள் இனிப் பேச்சுவார்த்தைகளில் நேரத்தைச் செலவழிக்கவொண்ணாது. அமெரிக்க பொருள்களை நாம் பகிஷ்கரிக்கவேண்டும். அவர்களுடைய சகலவற்றையும் நாம் பகிஷ்கரித்து அவர்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் தக்கபாடம் படிப்பிக்கவேண்டும்"

## ஜெர்மனி - அதனுடைய எதிர்காலம்

எழுதியவர்: ஸ்ரீ ஜூத் தாரகநாத் தாஸ்
தொகுத்தவர்: ஸ்ரீதரன்

(முற்றொடர்)

ஜெர்மன்-சோவியத் நட்பு

நெவில் சேம்பர்லேன் மியூனிச் உடம்படிக்கையை ஹிட்லருடன் செய்தது ருஷியாவுக்குப் பெரும்ஆத்திரத்தையும் கவலையையும்விளைத்தது இங்கிலாந்து, பிரான்ஸ் என்பவற்றின் உதவியுடன் ஜெர்மனி கிழக்குப் பக்கமாகத் தனது ஆதிபத்தியத்தை விஸ்தரித்துத் தனக்கே ஆபத்து விளைத்துவிடுமோ என ருஷியா அஞ்சியது எனவே, ஸ்ராலின் தனது நாட்டைப் பாதுகாக்கும் லட்சியத்துடன் ஹிட்லருடைய நட்பை நாடினார். ஓர் உடம்படிக்கையைச் செய்தார். போலந்துடன் தாம் முந்திச் செய்துகொண்டஉடம்படிக்கையைக் காற்றிற் பறக்கவிட்டு, மத்திய ஐரோப்பாவைத் தனக்கும் ஹிட்லருக்குமிடையே பிரித்துக் கொண்டார், ருஷியாவின் அபார நட்பைப் பெற்றுக்கொண்ட ஹிட்லர் போலந்தைத் தாக்கினார்; அதன்பயனாக மூன்றாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாயது அதன்பின் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் நாம் அறிந்தனவே; ஜெர்மனி படுதோல்வியடைந்தது. அதன் தோல்விக்குக் காரணம் என்ன? அது தன்னுடைய கேவலமான அந்நிய நாட்டுக் கொள்கையினால், இங்கிலாந்து; அமெரிக்கா, ருஷியா என்ற மூன்று அரசுகளையும் ஒன்றாக்கியது சத்துருக்களைப் போரில் மாத்திரம் ஜெயித்துவிட்டால் போதும் என ஜெர்மனிய சேனாதிபதிகள் எண்ணினர். இந்த எண்ணம்தான் அவர்களுக்கு ஈற்றில் நாசம் விளைத்தது.

ஜெர்மனியில் இப்போதைய கதி

ஜெர்மனி தோல்வியடைந்து விட்டது. அதனை நாலு கூறாக்கி நான்கு வல்லரசுகளும் பங்கு போட்டுக்கொண்டு இருக்கின்றனர். போலந்தும் ருஷியாவும் ஜெர்மனிக்கு ஹிருதய ஸ்தானமான கிழக்கு பிரஷியாவை ஆக்கிரமித்துக்கொண்டன. ஜெர்மன் யந்திரங்கள் யாவும் சீர்குலைக்கப்பட்டு ருஷியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அகற்றப்பட்டன. ருஷியாவிலே நாசமடைந்த நகரங்களைத் திருப்பிக் கட்டுதற்காக லட்சக்கணக்கான ஜெர்மனியரை அடிமை ஊழியராக ருஷியர் வேலை வாங்குகிறார்கள் ஜெர்மனியின் பாதுகாப்பை நான்கு வல்லரசுகள் இன்று மேற்கொண்டிருக்கின்றன. ஸார் பிரதேசமும் ரைன்லாந்துப் பிரதேசமும் ஜெர்மனியிலிருந்துபிரிக்கப்படவேண்டும் என்றும், ஜெர்மனிய கைத்தொழில்களைச் சர்வதேச ஸ்தாபனம் ஒன்று மேற்பார்வை செய்யவேண்டும் என்றும் ஓர் ஆலோசனை இப்போது கூறப்படுகிறது. இப்படியெல்லாம் செய்வது பிரிட்டிஷ் இராசதந்திரிகள் சிலர்க்கு விருப்பமில்லை. ருஷியாவுக்கு ஜெர்மனியர் அடிமைத் தொழிலாளராக அனுப்பப்படுவதை மிஸ்ரர் சேர்ச்சில் பலமாகக் கண்டிக்கிறார். ஜெர்மனியை நாலு கூறாக்காமல், ஒரே அரசாங்கமாக வைத்து நடாத்தவேண்டும் என அமெரிக்கர் விரும்புகின்றனர்.

ஜெர்மனியில் சமதர்ம வேகம்

ருஷியாவின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் ஜெர்மனியிலே இன்று மகத்தான புரட்சிகரமான மாற்றங்கள் நிகழுகின்றன. முன்னர் பெரும் முதலாளிமார்க்குச் சொந்தமாகவிருந்த காணிகள் நிலங்கள், தோட்டங்கள் யாவும் இப்போது பிரிக்கப்பட்டுச் சமதர்மமுறைப்படி பொதுஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள அரசியற் கட்சிகள் யாவற்றையும் ஒரேவிதமான கொள்கையுடைய சமதர்மக் கட்சியாக்க ருஷியா இன்று பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறது. ருஷியப்பகுதியில் இப்படி நடக்க, ஆங்கில அமெரிக்கர் ஆக்கிரமித்துள்ள ஜெர்மன்பகு

(தொடர்ச்சி ...ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத சிவாகமங்கள்

## சைவர்களுக்கு இன்றியமையாதன

(சி. நாகையா)

வேதசிவாகமங்களே சைவசமயத்தவர்களுடைய தனி முதற் பிரமாண நூல்களென்று முன்னர் ஒரு கட்டுரையிற் காட்டினேம். இக்கட்டுரையில் வேத சிவாகமங்கள்தாம் தங்கள் தனிமுதற் பிரமாண நூல்களென்றவறிவை என்றும் மறவாமற் சைவர்கள் நினைப்பில் வைத்திருக்க வேண்டிய இன்றியமையாமையைக் காட்ட முயலுகின்றேன்.

1. ஒரு சங்காரகால முடிவில் மறு சிருட்டியாரம்பமாகும். அப்பொழுது சுத்த மாயையில் நாதமே தோன்றும். அது விந்துவாய்ப் பின்கலையாய்ச் சுத்தாசுத்த மாயையிற் பஞ்ச பூதங்களாய்த் தோன்றித் தனுகரணபுவன போக்கியங்களைப் பயப்பிக்கும். இப்படித் தோன்றும் முறையில் அவ்வப் புவனங்களில் அந்தந்தப் புவன பதியாய் நின்று சிவபெருமான் தானே தோற்றுவிப்பர். இப்படித் தோற்றுவிப்பதையே படைப்பென்பர். இக்கிரமத்தில் ஒலிவடிவாயுள்ள நாதமும் வரிவடிவாயுள்ள விந்துவும், பஞ்ச பூதங்களுக்குமுன் தோன்றுவதைக் காணலாம். வேத சிவாகமங்கள் மக்கள் தோன்றுவதற்கு முன் தோன்றினவென்பது போதரும். இது யுக்திக்கும் மிகவும் பொருத்தமாயிருக்கிறதென்பதை இலகுவிற் காணலாம்; இப்படியில்லாமல், ஆன்மாக்கள் தோன்றியபின்னர் வேத சிவாகமங்கள் தோன்றியவென்றால், அது பொருந்தாது. ஆன்மாக்கள் தோன்றியபின்னும் வேதசிவாகமங்கள் தோன்றிய முன்னுமாகிய கால வெல்லைகளுக்கிடையில் ஒருகாலப் பரப்பிருக்கிருக்குமே. அப்பரப்பு முழுவதும் மக்கள் வகுப்பினர் எது நல்வினை எதுதீவினை என்றறியாதவர்களாய் மனமெழுந்தவாறெல்லாம் நடந்து வீணில் அலைவர். இப்படி விடுவது சர்வஞ்ஞத்துவமுள்ள கருணையங் கடவுட் கிழுக்காகுமன்றோ! முன் வேத சிவாகமங்கள் தோற்றினால் விதிவிலக்கறிந்து மக்கள் நல்வாழ்வு நடத்தலாமே, ஆகையினாற் சமய வாழ்வுக்கு வேத சிவாகமங்களி னின்றியமையாமை புலப்படும்.

2. என்று மெமக் குதவியாயிருக்கும் பெருங் கருணைக்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்களாகிய நாமறிந்து அறிந்தாங் கொழுகிக் கடைத்தேறுவதற்காகத் தம் முற்றறிவில் உவந்தருளியவைகளே வேத சிவாகமங்கள் என்று நினைக்க அவர்தம் பெருங்கருணை ஒருவாறு தெளியும். வேதசிவாகமங்களின் பெருமையும் பரிசுத்தமும் புலப்படும். புலப்படவே நம்பிக்கை யேற்படும். ஏற்படவே அறியவேண்டிய அவா மேலிடும். மேலிடவே அவைகள் கொள்பொருளைப்பற்றிய அறிவுஞ்சேரும். சேரவே விதித்தனவற்றைச் செய்தும் விலக்கியவற்றைச் செய்யாதும் வாழவரும். இதுவே புண்ணிய வாழ்வாகும், இதுவே சைவவாழ்வாம். இதுவே வாழ்வாங்கு வாழுதலுமாம். இதற்குமேல் மக்கள் பெறவேண்டிய பயனேது.

3 ஞானமே சக்தி. அறிவே தகைமைதரும். வேத சிவாகமப்பொருளை நேரே யறிந்தாலோ அல்லது அவைகளின் சாரமாகிய நூல்களாலறிந்தாலோ மக்கள் தவறாது தம் சிறுமையை யுணர்வர். அவை தம் பெருமையையும் யுணர்வர். உணரவே தாம் சிவபெருமானுடைய அடிமைகளென்றும் தமதென்ற மாயேயங்கள் யாவும் அவரது உடமையென்ற ஞானமுதிக்கும்; உதிக்கவே யான் எனதற்ற நிரதிசய வாழ்வுக்கு ஏதுவாகும். அகங்கார மமகாரம் நீங்கிய வாழ்விலும் பெறும்பேறு யாது?

4 வேத சிவாகமங்கள் இறைவாக்காதலினால் ஆன்மாவின் பக்குவங்களுக்கேற்ப முற்றறிவனாற் செப்பனிடப்பட்ட செம்மையுடையன. கடவுள், ஆன்மா, மலம், மாயை ஆதியன கண்ணுக்குப் புலப்படாதன. இவைகளின் தன்மைகளை மனிதன் சிற்றறிவினாலுணர்ந்து கடைத்தேறுவதென்பது முடியாத காரியம். அகம் புற மயக்கங்கள் சாதாரண மனிதனை விழுங்கிவிடும். விழுங்கப்படாமற் காக்கக்கூடிய செவ்விநலம் இறைவனாலருளப்பட்ட வேதசிவாகமங்களுக்கே யுண்டு. இவை படிப்படியாய் மேல் மேல் ஈர்த்துச் செல்லும், உற்சாகமும் ஊக்கமும் சுவையும் செல்லச் செல்ல அதிகரிக்கச் செய்யும். இவையிருப்பத் தமது புத்தியையோ மனச்சாட்சியென்ற தம் அறிவுத் தொகுதியையோ கொண்டு சிவபுரஞ்செல்ல நினைப்பது நரிவால்கொண்டு கடலாழம் அளக்க நினைப்பதை யொக்கும்.

5 மேலும் வேத சிவாகமங்கள் இறைவாக்காதலினால் எக்காலத்தும் எல்லார்க்கும் அதியுத்தம நன்மை பயப்பனவாகும். சிவபெருமான் தானே, தன்னைக் கிட்டிச் சேரும் வழியொன்றைக் காட்டியிருக்கிறாரென்றால் வேறெவர் செய்யும் நூல்தான் இதற்கிலக்கானவோர் வழியைக் காட்டமுடியும். இவ்வளவு சுருக்கமாயிருக்க முடியுமோ? இவ்வளவு இலகுவானதாயும் நேராயுமிருக்க முடியுமோ? இவ்வளவு தூரம் நாமடையவேண்டிய இலக்கைத் தவறாக அகப்படுத்தக்கூடிய வன்மையுடையதாயிருக்கமுடியுமோ? இல்லை இல்லை: ஆகையினாலும் வேத சிவாகமங்கள் சைவசமயத்தவராற் சிரமேற் கொள்ளப்படவேண்டியஇன்றியமையாமையுடையன.

## இந்தியர்வுக்கு ருஷிய அநுதாபம்

சென்றவாரம் ஐக்கியநாடுகளின் ஸ்தாபன மகாகூட்டத்தில் தென்னாபிரிக்கப் பிரச்சினை வந்தபோது ருஷியப் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு அநுசாரணையாகப் பேசியது பலர்க்கு ஞாபகமிருக்கலாம். ருஷிய அந்நியநாட்டு மந்திரியான மொலொற்றவ் இந்தியா விஷயமாகப் பேசியபோது, இந்தியாவுக்குக் கட்டாயம், உடனே பூரண சுதந்திரம் கொடுத்துவிட வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறினார். அவருடைய பேச்சு மிகவும் நல்லாக ஆங்குச் சமூகமாயிருந்த பலநாட்டுப பிரதிநிதிகள் மனத்திலும் பதிந்தது. இவ்விஷயமாக இந்தியாவின் பிரதிநிதிகள் கோஷ்டிக்குத் தலைமைதாங்கிச் சென்றுள்ள ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி மொலொற்றவிற்கு நன்றி பாராட்டி "மிஸ்ரர் மொலோற்றனின் பிரசாரணம், இந்தியாவின்மீது ருஷியாவுக்கு உள்ள நேசபான்மையைக் காட்டுவதாகவிருக்கிறது" என்று கூறினார்.

## இந்திய-பர்மா தொடர்பு

இந்தியாவும் பர்மாவும் இப்போது தனித்தனி பொறுப்பாட்சியுள்ள நாடுகளாக விளங்குகின்றன. அவை தமக்கிடையேயுள்ள நேசபான்மையை விருத்தியாக்கற் பொருட்டு இராஜீயத் தொடர்புவைக்க நிச்சயித்து, அரசியல் தூதுவர்களை அனுப்பத் தீர்மானித்திருக்கின்றன. இந்தியாவின் தூதுவராக மிஸ்ரர் எம். ஏ. ரூப் என்பவரும், பர்மா அரசாங்கத்தின் தூதுவராக மிஸ்ரர் மையிங் தீன் என்பவரும் இப்போது நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள்.

## பக்திவலைப்படும் பரமபதி

1-ம் பக்கத் தொடர்ச்சி

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே - புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன் - பொக்க மிக்கவர் பூவுநீருங்கண்டு – நக்கு நிற்பன வர்தமை நாணியே" என்றவாறு மெய்யன்போடு கலவாத ஆடம்பரச் செயல்களாற் தீதன்றி நன்மை சிறிதுமில்லையாகும். அன்பு மயமான செயல்களே நன்மை தரும். போலியன்பு கள்வன், பொற்பணி பூண்டிருக்குஞ் சிறுவனிடஞ் செய்யும் அன்பு போன்றது. அதனை விடுத்து நம்மை மறைந்து நின்று கெடுக்கும் ஆணவ நோயைப் போக்கும் வைத்தியநாத னென்று நெக்கு நெக்குருகி ஆகம வழி நின்று பணிபுரியும் மெய்யன்பை யடைய வேண்டும். அதுவே பக்தி அப்பக்திவலைப் படுபவரே பரமபதி. அவரே ஈசுவரன்: அவரே சிவபெருமான்: விநாயகர்: சுப்பிரமணியர்: என்பதை உணர வேண்டும். இவ்வாறுணர்ந்து வழிபடும் உணர்ச்சியில்லாது ஆணவ முனைப்பினோடும் அரன்பணியென்று பெரும் பொருள் விரயஞ் செய்து வீணான களியாட்டயர்தல் ஒருபோதுங் கூடாது: பெரும் பணங் கொடுத்து ஒரு வைத்தியனிடம் நன்மருந்து பெற்றுண்போர் அவன் கட்டளைப்படி பத்தியமும் அனுபானமும் பேணாமையால் தீரா நோயாளராய்த் துன்புறவும் நேரிடுகின்றதல்லவா? ஆகையால் ஆகம விரோதமானவைகளைச் செய்யாது விடுதல் நமது கடமையாம்.

ஒரு பிரதம நீதிபதி முன்னிலையில் நிற்போர் எவ்வளவு கட்டுப்பாட்டுடனும் அச்சத்துடனும் நிற்க வேண்டி நேரிடுகிறது. அத்தகையோர் பல்லாயிரவரைக் கொண்ட பூமிக்கும் பூமியினும் பல்லாயிர மடங்கு பெரிய சூரியனுக்கும் அவற்றையெல்லாம் அடக்கிய பலகோடி அண்டங்களுக்கும் ஏகச்சக்ராதிபதியாகப் பொருந்தியவரன்றோ கடவுள். அவருடைய சந்நிதானத்திலே நின்று கொண்டு, அவரே எல்லாஞ் செய்பவர், தருபவரென்று விசுவசித்துப் பிரார்த்திக்கும் நாங்கள் எவ்வளவு பயபக்தியுடனே நிற்றல்வேண்டும், பணிவிடைகளைச் செய்தல் வேண்டும், இதனைச் சிந்திக்கிறோமா? ஆகம வாக்குகளை மதிக்கிறோமா? அவற்றை விடுத்து பின் வரவிருக்குந் தண்டனைக்காளாகலாமா? குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசி வருந்துவோர்போலாகலாமா? ஆகையால் ஆலயக்கிரமங்களைக்கற்றுங் கேட்டுமுணர்ந்து அவ்வழியினின்றுபேரின்பமடைய எங்கள் யாவருக்குஞ் சிவகுகன் திருவருள் பாலிப்பாராக. 'பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார் - ஆக்கைக்கேயிறை தேடியலமந்து - காக்கைக்கேயிரை யாகக் கழிவரே''.

## அறிவித்தல்

புறூடென்ஷல் வீமாக் கொம்பனியினால் அளிக்கப்பட்டுள்ள N. துரையப்பா என்பவருடைய ஜீவியபாலிஸி இலக்கம் 5429139ம் 4291508ம் இழக்கப்பட்டுவிட்டன என அறிவிக்கப்படுகிறது. அதனைக் கண்டு எடுப்பவரோ, அல்லது அந்த வீமாப் பாலிசிமீது தொடர்பு உள்ளவரோ ஷை வீமாக்கம்பனி மானேஜர் அல்லது இலங்கையில் அதன் பிரதம பிரதிநிதிகளாகவுள்ள டெல்மீஜ் போர்ஸீத் கம்பனி, தபாற்பெட்டி இல 45, கொழும்பு என்பவர்களுக்கோ இவ்விஷயமாக அறிவிக்க வேண்டும்,

S. சிவஞானம்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 554-ம் இல. வழக்குத் தத்துவகாரியின் [illegible]தாரந்தார்.

Mis 215 5

## பொலிசார் செயல் கண்டிக்கப் பட்டது

டக்ரர் என் எம் பெரீராவை, வேலைநிறுத்தக்காலத்திலே, அவர் தேசாதிபதியிடம் போகவிருந்த நேரத்திலே பொலிசார் சிறைசெய்து கொண்டு போயினர் அல்லவா? இவ்விஷயமாகச் சென்றவாரம் உள்நாட்டு நிர்வாகசபை கூடி ஆலோசித்தது. பொலிஸ்பகுதித் தலைவரான மிஸ்ரர் பேக்கன் என்பவரும் பிரசன்னமாயிருந்தார். இந்தப் பாரதூரமான விஷயத்தில் உள்நாட்டு மந்திரசபையைக் கலந்தாலோசிக்காமல் டக்ரர் பெரீராவைப் பொலிஸ் அதிகாரிகள் சிறைசெய்தது மிகவும் பிழை என்று ஷை நிருவாகசபை அபிப்பிராயப்பட்டு, இவ்விஷயத்தில் நடைவடிக்கை எடுத்த இரு உயர்தர அதிகாரிகளின் செயலைப் பலமாகக் கண்டித்தது.

## இலங்கைத் தமிழர் கலாவிருத்திச்சங்கம் கோலாலம்பூர்

இம்பி ரோட்டில் அமைந்திருக்கும் மேற்படி சங்க மண்டபத்தில் தீபாவலிப் பண்டிகை வைபவங்கள் விய வருஷம் ஐப்பசி மாதம் எ-ந் திகதி (23-10-46) பிற்பகல் 6 மணிக்கு ஆரம்பமாயிற்று. "தீபாவலி" என்னும் விஷயம்பற்றி ஸ்ரீமாந் த. சிவப்பிரகாசம்அவர்கள் ஒரு அரிய சொற்பொழிவாற்றினார்.

'முருகன் திருவிளையாடல்' என்ற திவ்விய சரித்திரத்தை சங்கீத வகுப்பு மாணவிகளிற் சிலர் நடித்துக் காண்பித்தார்கள். திருக்கயிலையின் மேடை அமைப்பும், பழநியில் பழநிநாதன் பள்ளிகொண்ட வனப்பும் பாராட்டத்தக்கதா யிருந்தது. நாரதரின் இனிய கானங்களும், சுப்பிரமணியர் வெம்பகையால் சிந்தின மொழிகளும், உணர்ச்சிப் பெருக்கின் உன்னத சாகையை மருவியது. திருக்கயிலைக் காட்சியில் நடனமும், பழநியின் காட்சியும் நடனமும் கரகோஷத்துடன் முடிவெய்தின,

பக்கவாத்திய அமைப்பில் சங்கீத வகுப்பின் இரண்டு ஆசிரியைகளும் வயலினும் ஹார்மோனியமும் வாசித்தார்கள். சங்கத்தின் அங்கத்தினர் திரு. ச. அருளம்பலம் மிருதங்கம் வாசித்தார்.

நாடகத்தின் கடைசிக் காட்சிக்கு முன்பதாக சபைத் தலைவர் ஸ்ரீமாந் மு. கனகசபை அவர்கள் பண்டிகையின் அபிவிருத்திக்காக ஒத்துழைத்தவர்களுக்கும் வந்திருந்த சபையோர்க்கும் வந்தனம் கூறினார். கொண்டாட்ட வைபவங்கள் 9 மணியளவில் நிறைவேறின்,

—கடித.

## விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 260ம் இலக்கப் பராபரிப்பு தத்துவ வழக்கில் தத்துவகாரனாக நியமிக்கப்பட்ட சுழிபுரம் சம்பந்தர் சுப்பையா அவர்களுக்கு இதன்பின்னால் ஆதனடாப்பில் விபரித்திருக்குங் காணியை விற்பதற்கு உத்தரவு கொடுத்திருக்கிற படியால் அவ்வாதனத்தை உயர்ந்தவிலை கேட்பவற்கே விற்பதாகத் தீர்மானிக்கப்பட்ட படியால் கீழே விபரிக்கப்படும் ஆதனத்தை வாங்க விரும்புவோர் தாங்கள் வாங்க விரும்பும் விலைகளையும் விஷயங்களையும் மேற்படி வழக்கில் தரணியாகவிருக்கும் சுழிபுரம் தா. சங்கரப்பிள்ளை பிறக்ரர் அவர்களிடம் அல்லது மேற்படிகோட்டின் சக்கடத்தார் அவர்கள் இடம் இவ்விளம்பரத் தேதியின் 21 நாளைக்குள் தெரிவிக்கும்படி அறிவிக்கப்படுகிறது.

ஆதனம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோயிற்பற்று தொல்புரம் இறை ஆவரம்பிட்டி பிச்சிப்புலம் தலைசாட்டி பர. நெல் இலா 14 குளி $7\frac{1}{2}$ எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் சிவகாமன், வடக்கு சம்பந்தர் வேலாயுதற்கும் செல்லப்பா பெண் வள்ளியம்மைக்கும், மேற்கு ஆள்வான் பெண் கொத்தியார், தெற்கு தம்பையா சுப்பையாவும் மறுவும் இது அடங்கலிற் சொரியலாய் அரைவாசி,

T. Sangarapillai
Proctor for Guardian.

Mis 212 5, 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அரசியல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபல முஸ்லிம்லீக் தலைவர்கள் சிலர் இப்போது ஸில்ஹெற் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர், விசாரணை இன்னும் முடியவில்லை.

* *

### ஸ்ரீ கிருஷ்ணமேனன்

இப்போது அமெரிக்கா, வாஷிங்டன் நகரத்திலே நிகழும் ஐக்கியதேச மகாநாட்டிற்கு, பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் அந்தரங்க பிரதிநிதி என்ற நியதியில் ஸ்ரீ கிருஷ்ணமேனன் அவர்கள் போயிருக்கிறார். அவர் அங்கே ருஷியாவின் அயல்நாட்டு மந்திரியான மொலொற்றவ் என்பவரைச் சந்தித்துப் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார் என்று தெரிகிறது. ஸ்ரீ மேனன், தாம் டிசெம்பர்மாதத்தில் ருஷியாவுக்கு விஜயம் செய்யக் கருதியிருப்பதுசம்பந்தமாக மொலொற்றவிடம் சம்பாஷத்தார் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

* *

### வெளியாகிறது

இடைக்கால அரசாங்கத்தில் மூஸ்லிம் லீக்கினர், தமக்களிக்கப்பட்டுள்ள 5ஸ்தானங்களில் ஒன்றைத் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஹிந்துவுக்கு வழங்கியதன் காரணம் என்ன என்று உலகமே அதிசயித்தது. பரோபகார பாந்த சிந்தையினால் இப்படி மூஸ்லிம்லீக் செய்யவில்லை என்பது மெல்ல மெல்லவாக வெளியாகிறது. இது ஓர் ஆழ்ந்த சூழ்ச்சி. தீண்டாதாரை முஸ்லிம்களாக்குவதற்கே இம்மார்க்கம் கைக்கொள்ளப் பட்டிருக்கலாம் என்றும் சிலர் இப்போது பேசிக்கொள்ளுகின்றனர்.

* *

### அம்பெத்கார் கூற்று

தீண்டாதாரின் ஓர் பகுதியின் தலைவரான டக்ரர் அம்பெத்கார் இப்போது இங்கிலாந்தில் நிற்கிறார். அவர் தீண்டாதார் விஷயமாக லண்டன் பத்திரிகைநிருபர்க்குக் கூறியன அவதானிக்கற்பாலதாகும். புதிய இந்திய அரசாங்கத்திலே தீண்டாவகுப்பினர்க்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாவிட்டால் அங்குள்ள தீண்டாதார் யாவரும் மூஸ்லிம் வகுப்பினருடன் சேர்ந்து கொள்ளக்கூடும் என்று அவர் கூறினார். முஸ்லிம்மதத்திற் சேருவதற்குத் தீண்டாதார்க்குத் தாம் ஆலோசனை எதுவும் இதுவரைகூறவில்லை என்றும், ஆனால் ஹிந்துக்களும் காந்தியும் தீண்டாதார்க்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்காவிட்டால், அவர்கள் முஸ்லிம்களாகவும் யோசிக்கலாம் என்று அம்பேத்கார் கூறினார். அம்பேத்காரின் கூற்றுக்கும், முஸ்லிம் லீக் தாழ்த்தப்பட்டவர் மீது கொண்டுள்ள அநுதாபத்துக்குமிடையே ஓர் தொடர்பு இருக்கலாம் என்று சொல்லப்படுவதில் என்ன நூதனம்?

## ஜெர்மனி அதனுடைய எதிர்காலம்

(3ம் பக்கத் தொடர்ச்சி

தியிலே சமதர்மிகள் முறியடிக்கப் பட்டிருக்கின்றனர். இந்த நிலைமையில் ஜெர்மனிக்குள்ளேயே ஓர்விதமான போர் வல்லரசுகளுக்கிடையே ஆரம்பமாகியிருக்கிறது. ருஷியாவுக்கு விரோதமாக, ஜெர்மன் மக்கள் அனைவரையும் திரட்டவேண்டும் என்பதே ஆங்கில - அமெரிக்கரின் அரசியற் கொள்கையாகவிருக்கிறது. இவ்வளவுடன் நிற்கவில்லை. இந்த வல்லரசுகள் ஜெர்மன் விஞ்ஞானிகளையும் ஒவ்வோர் பக்கமாக இழுக்கிறார்கள். அமெரிக்காவில் பெரும் தொகையான ஜெர்மன் விஞ்ஞானிகள் இரகசியமான பல ஆயுத உற்பத்திவேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் ருஷியாவிலும் பல ஜெர்மன் நிபுணர்கள் அணுக்குண்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த நாடுகளுக்கு மாத்திரம் இளைப்பதோ என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் பெருந்தொகையான ஜெர்மனிய விஞ்ஞானிகளை ஒவ்வொருவராக அழைத்துச்சென்று மிகப் பயங்கரமான ஆயுத உற்பத்தி வேலைகளில் அமர்த்தியிருக்கின்றனர். (வரும்)

## சேர் ஒலிவர் திரும்பினார்

இங்கிலாந்துக்குச் சென்றிருந்த இலங்கை நிதிக் காரியதரிசி சேர் ஒலிவர் குணத்திலகா சென்றஞாயிற்றுக்கிழமை இலங்கைக்குமீண்டுவிட்டார். நேற்றையத்தினம் அவர் மந்திரசபைக் கூட்டத்திற் சமூகமாயிருந்து தான் இங்கிலாந்திற் செய்துள்ள வேலைகளைக் கூறினார். அவர் இங்கிலாந்திலே ஆற்றிய விஷயங்கள் சம்பந்தமான ஓர் அறிக்கை கூடியசீக்கிரத்தில் வெளியிடப்படும்.

## அரசியல் என்பது அசங்கதமானதா?

3-ம் பக்கத் தொடர்ச்சி

கின்றன. இக்கட்சிகள் யாவும் இலங்கையின் முன்னேற்ற விஷயத்தில் ஒரே விதமான அபிப்பிராயமே கொண்டிருக்கின்றன. ஆகவே இவை இப்படிப் பெருந் தொகையினவாக இல்லாமல், ஒன்று சேர்ந்து இரண்டு அல்லது மூன்று கட்சிகளாகக் கருமம் ஆற்றினால் என்ன என்று ஓர் கேள்வி பிறக்கிறது. ஆனால் அந்த நல்லகுணம் இலங்கை அரசியல்வாதிகளுக்குக் கிடையாது பதவி வேட்டையே இக் கட்சிகளின் உற்பத்திக்கும், விருத்திக்கும் காரணம் இன்று ஒருகட்சிப் பிரமுகரா யுள்ள ஒருவரை, அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு அக்கட்சி, அபேட்சகராகத் தெரிந்தெடுக்காது என்று கண்டவுடனே அவர் இன்னோர்கட்சியை உண்டாக்கி விடுகிறார். அல்லது ஏற்கனவே உள்ள வேறோர் கட்சியிற் பிரவேசித்து விடுகிறார், இன்னும் ஓர் சிலர் மதின்மேற் பூனை என நிற்கின்றனர். இலங்கையில் இன்றுள்ள கட்சிநிலைமை, இந்தியாவின் சிந்து மாகாணத்தின் நிலைமைக்குச் சமமாக இருக்கிறது.

●

### 2கோடி ரூபா

அடுத்த பாராளுமன்றத்துத் தேர்தலுக்கான 101 ஸ்தானங்களுக்கும் குறைந்தபட்சம் 400 அபேட்சகர்களாவது முற்படுவர் என்று திடமாகக் கூறலாம். இவ்வளவுபேரும் "தேசசேவை" ஒன்றையே பிரதான லட்சியமாகக் கொண்டு பாராளுமன்றத்துக்குள் நுழையத் தனித்தனி அவசரப்படுகின்றனர். இதுஓர் நல்ல லட்சியம் அதனை எவரும்மெச்சவேண்டியது: சென்ற 1936-ம் ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தலிலே அபேட்சகராக முன்வந்தோரிற் பலர் தம் லட்சியம் கருதி தனித்தனி 25000 ரூபாவரையில் செலவழித்தனர் என்று சொல்லப்படுகிறது. இப்போதுள்ள நிலையில் இத்தொகை போதாது; குறைந்தபட்சம் 50000 ரூபாயாவது இவ்வபேட்சகர்களுக்குத் தனித்தனி செலவாகலாம். அப்படியாயின் இந்த 400 அபேட்சகர்களும் ஏறக்குறைய 2 கோடி ரூபாவரையிற் செலவழிக்க வேண்டி ஏற்படும். இப்படி 2கோடி ரூபாவை அநியாயமாகச் செலவழித்தும் 101 பேர் மாத்திரமே அங்கத்தினராக வரமுடியும். மீதி 299 பேரும் வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் பிழந்தவர் கதியையே அடைவர் உண்மையானதேசசேவைக்கு பாராளுமன்றம் ஒன்றுதான் மார்க்கமல்ல: வேறு மார்க்கங்கள் பலவுண்டு. தேசசேவையே பெரிதாகக்கொண்டு, இந்நாட்டு மக்களுக்குத் தொண்டுபுரிய, துடி துடித்துக்கொண்டுள்ள இவர்கள் எல்லாரும் ஓர் மகாநாட்டைக் கூட்டி தமக்குள்ளே 101 பேரைத் தெரிவு செய்துவிட்டு, மற்றவர்கள் விலகிக்கொள்ளலாம். தேர்தலுக்குச் செலவழிக்க வேண்டிய 2 கோடி ரூபாவையும் ஓர் பொதுக் கைங்கரியத்துக்குச் செலவழிக்கலாம். இந்த அபிலாசையுடைய அபேட்சகர்களாக வருபவர்கள் சிந்திப்பார்களா?

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

மறுவறு மாரலாகு மாதர்மூ விருவர் தாமும்
நிறைதரு சரவ ணத்தி னிமலனை யடைந்து போற்ற
வுறுவர்க டமக்கு வேண்டிற் றுதவுவோ னாத லாலே
யறுமுக வொருவன் வேறு யறுசிறு ருருவங் கொண்டான்.

பாசம் நீங்கிய கார்த்திகைப் பெண்களறுவரும், நிறைவுற்ற சரவணவாவியின் கண்ணே யெழுந்தருளிய மலரகிதராகிய முருகக் கடவுளைச் சமீபித்து வணங்கித் துதிக்க, தம்மைத் தஞ்சமென் றடைந்தவர்கட்கு அவரவர் அருத்திகளை யருள்புரியும் கருணைமூர்த்தியென்ற காரணத்தினால் (அந்த) அறுமுகப் பரம்பொருளாவார் தனித்தனி ஒவ்வொரு திருமுகங்களோடு கூடிய ஆறு குழந்தைப் பெருமானாகத் திருவடிவங் கொண்டருளினாரென்பது கருத்து.

ஆரல் - கார்த்திகை நட்சத்திரம்; எவ்வகை வளங்களாலும் நிறைந்துள்ள தடாகமாதலின் நிறைதரு சரவணம் எனப்பட்டது; வேண்டுவார் வேண்டுவன ஈயும் விமலனாதலின், இங்கே கார்த்திகைப் பெண்களறுவரும் தனித்தனி ஒவ்வோர் சேயாக வைத்துப் போற்றும் வண்ணம் யறுசிறு ருருவங் கொண்டருளினரென்க.

[இயக்கப்பெண்களாய அறுவர் தவஞ்செய்து சிவபிரானால் அட்டமாசித்தி யுபதேசிக்கப்பெற்றனர்; சிவபிரானிடத்து அட்டமாசித்தி யுபதேசம் பெற்ற மகத்துவத்தினால் மறுவறு மாரலாகுமாதர் என்றார்: இனி, முருகக் கடவுளைக் குழவியாக வைத்துப் பேணப் பேறுபெற்றாராதலின் அவர்களை மறுவறு மாரலாகுமாதரெனக் கூறியதெனினும் பொருந்துமென்க.] (116)

ஆறுரு வாத லோடு மறுவரு மகிழ்ந்து வேறு
வேறுதா மெடுத்துத் தத்தம் வியத்தகு துணைமென் கொங்கை
யூறுபா லமுத மன்னோற் குதவலு முறுவல் செய்து
மாறிலா வருளா லாற்ற வருந்தினன் போல வுண்டான்.

முருகக்கடவுள் ஆறு குழந்தைகளின் திருவடிவங்களைக் கொண்டருளியவுடன் கார்த்திகைப் பெண்கள் அறுவருஞ் சந்தோஷமடைந்து தனித்தனி ஒவ்வொரு குழந்தை வடிவத்தை எடுத்துத் தங்கள் தங்கள் சிறந்த மென்மையான இரு தனங்களிலும் சுரக்கும் பாலாகிய அமுதத்தை (அவ்வக்) குழந்தைக்கு அருத்த, புன்முறுவல் பூத்து ஒப்பற்ற கிருபையோடு பசியால் வருந்தியவர்போலக் குடித்தார் என்பது கருத்து.

தம்பொருட்டுத் தனித்தனி சேய்வடிவங் கொண்டருளினாராதலின், அறுவரும் மகிழ்ந்தனரென்க. அருளால்- அருளோடு; உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. கார்த்திகைப் பெண்கள் அமிர்தத்தைச் செவ்வேள்பொருட்டுச் சுரக்க, செவ்வேள் அவர்களுக்கு அருள் சுரந்தாரென்றபடி.

[பரமபதியாகிய முருகக்கடவுள் சேயாயமைந்து தம்வாய் பரிசிக்கும் பேற்றைப் பெற்றனவாதலின் வியத்தகு கொங்கையென்றார்' ஒப்புயர்வற்ற பரம்பொருளாகிய தம்மைச் சிறு பிள்ளையெனக் கருதித் தங்கள் முலைப்பாலையூட்டுகின்றனரே இவரறியாமை யிருந்தபடியென்னை யென்றதால் எழுந்த அவமதிப்பாக முறுவல் செய்தாரென்பது; இவ்வாறன்றிக் கார்த்திகைப் பெண்கள் இறைவராகிய தமது பசிநோய் தீரும்வண்ணம் பால் கொடுத்தழியுண்டு மகிழ்ந்து முறுவல் செய்தாரென்பது மொன்று; போல் என்றதனால் இது நாடக மாத்திரையாமென்பது பெறப்பட்டது] (117)

உண்டபி னறுவ ராகு மொருபெரு முதல்வன் றன்னைத்
தண்டலை பொதுளு நீபத் தண்ணிழற் பொய்கை தன்னில்
வண்டயி லுறுத கஞ்ச மாமலர்ப் பள்ளி சேர்த்திக்
கண்டுயில் செய்வித் தேத்தக் கருணையா லினைய செய்வான்.

பாலைப் பருகியபின், (அச்சமயத்தில்) ஆறு குழந்தைகளின் வடிவங் கொண்டருளிய ஏகமூர்த்தியாகிய முழுமுதற் கடவுளைக் குளிர்ச்சிபொருந்திய தளைகள் செறிந்த கடப்ப மரங்களின் தண்ணிய நிழலோடுகூடிய சரவணத் தடாகத்தில் வண்டு படியாத பெரிய தாமரைப் பூவாகிய படுக்கையிற் கிடத்தி உறங்கும்படி செய்து தாலாட்ட, அவர்களிடத்துக் கொண்ட திருவருள் காரணமாக இத்திருவிளையாடல்களைச் செய்வாராயினாரென்பது கருத்து.

[வண்டயி லுறுதம்லர் - மலர்ந்தபின்னும் வண்டுகள் தெய்வத்தன்மையினாற் படிதலில்லாத மலர்; அயிலல் - உண்டல்.] (118)

துயிலவோ ருருவந் துஞ்சித் துண்ணென வெழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்
தயிலவோ ருருவ நக்காங் கமரவோ ருருவ மாடல்
இயலவோ ருருவம் வாளா விரங்கவோ ருருவஞ் செய்தான்,

ஒரு வடிவம் உறங்கவும், மற்றொரு வடிவம் உறங்கி இடையில் விழித்தெழுந்து மழலைமொழி பேசவும், வேறொரு வடிவம் தம் செவிலித்தாயின் முலையிற் பவளம்போன்ற வாயை வைத்துப் பால் குடிக்கவும், பிறிதொரு வடிவம் சிரித்தபடி (தாயின் மடியிலே) இருப்பவும், இன்னொரு வடிவம திருவிளையாடல் புரியவும், ஒழிந்தவொரு வடிவம் ஓயாமல் அழவுஞ்செய்தருளினாரென்பது கருத்து.

ஓருருவம் துயில என்ற முறையிற் கொண்டு கூட்டி, உருவங்கட்குப் பொருள்கொள்க, பயோதரம் - தனம், கார்த்திகைப் பெண்களுள் ஒருத்திக்கொரு வடிவங் கொண்டனராதலின் "யாய்தன்" என ஒருமையிற் கூறினார்; ஒருபெரு முதல்வனே இங்ஙனம் தமது அருள் வடிவங்களாறையுங் கொண்டு செய்தமையின் 'செய்தான்" என்றார்; அடுத்துவருந் திருவிருத்தங்களிலும் புரிதலுற்றான் செய்தான் என வரும வினை முடிபுகளுக்கு இங்ஙனமே பொருள்கொள்க; இறைவன் வாளாவிருப்ப, அவன் கொண்ட அருள் வடிவங்களே இத் திருவிளையாடல்களை இயற்றினவென்பது நுண்பொருள். இது அடுத்துவருந் திருவிருத்தத்தில் "ஒருவனே புரிதலுற்றான்" என வருதலாலும் புலப்படும். இத் திருவிருத்தத்திற் சொல்லப்பட்ட திருவிளையாடலெல்லாம் நடை பயிலும் பருவத்திற்கு முந்திய நிலையிலுள்ள குழந்தை செய்வனவாம். (119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

# அஜ்மீர் ஜெனரல் அஷுரன்ஸ்

## வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

**எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி**

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்.

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)



## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis.25 23-4-46 to 22-3-47)



## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, துணைவியில் 2 நெல் வயல்களும் 5 வளவுகளும் விலைக்கிருக்கின்றன. இவைபற்றிய விபரங்களையும், விலைகளையும் பின்வருவோரிடம் அறிந்துகொள்க.

Dr. C. Sivasithamparam
No. 27, 34th Lane
Wellawatte

Mis 200 29&5-11-46


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் நவ 6

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 வி சங்கரலிங்கம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வீணை பாட்டு இசைத்தட்டு 8-30 கே தங்கம்மா பாட்டு 9 முடிவு.

1 கரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே தங்கம்மாபாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கே தங்கம்மா பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 வி சங்கரலிங்கம்பிள்ளைபாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 குரல்வகை இசைத்தட்டு 7-15 வாசெவி வாத்யகோஷ்டி 7.30 தமிழில் செய்திகள் 7.45 நமது தபால்பெட்டி 8 பிகே விஸ்வநாதசர்மாவயலில் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கிதம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9.45 ஆங்கில நிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் நவ 7

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கே கௌரிஅம்மாவீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8.30 வி எஸ் கிருஷ்ணமூர்த்திராவ் 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2 தமிழில்செய்திகள் 2.05 எஸ் கிருஷ்ணமூர்த்திபாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 கே கௌரிஅம்மா வீணை 5.40 இசைப்பயிற்சி 6 அங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 புதிய வெளியீடுகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 முடிகொண்டான் வி வெங்கடராமய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 இன்பவாழ்வு நாடகம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள்வானிலை 9.45 வி எஸ் கிருஷ்ணமூர்த்திராவ் பாட்டு 10-30 முடிவு.

### வெள்ளி நவம்பர் 8

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்தியகோஷ்டி 8.30 எம் எஸ் நடராஜபாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 அங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் ஏ பார்வதி அம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 எம் ஏ பார்வதி அம்மாள்பாட்டு 2.15கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 எம் ஏ பார்வதி அம்மாள் பாட்டு 5.40 குரான்-ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ் கே வெங்கடரமணன்பாட்டு 7.20 தமிழில் செய்திகள் 7-45 வாத்தியார் விசாரம் 8 திருவிடமருதூர் பி எஸ் வீருசாமிபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கே சங்கரராம ஐயர் வீணை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 உலகவிவகாரங்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.


## விளம்பரம்

### வட்டுக்கோட்டை சைவாங்கில வித்தியாசாலை

ஷை வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கம் மார்கழி மாதம் 1946-ம் ஆண்டு நிறுவ நிச்சயித்திருப்பதால், பழைய மாணவர் எல்லோரும் தங்களுடைய பெயரையும், விலாசத்தையும் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்க்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

சே. சிவகுருநாதபிள்ளை
தலைமை ஆசிரியர்.

சை. ஆ. வி.
வட்டுக்கோட்டை
26—10—46.

Mis 205 29—5-11.46



## அறிவித்தல்

கிளிநொச்சிக் கலனி குடியேற்றத்தில் வீடுகள் கட்டும் இடங்களில் 12,200 புசல் சூளைச் சுண்ணாம்பு கொடுப்பதற்கு 1946ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 19ந் திகதி பகல் 12 மணி வரைக்கும் கொழும்புத் திறைசேரியில், ரெண்டர்போட் சேர்மன் அவர்கள் ரெண்டர் ஏற்றுக்கொள்வார். ரெண்டர்கள் ரூபா 100/ பணம் கட்டி வடமாகாண அரசாட்சி ஏசண்டரிடம் பெற்றுக்கொண்ட போம்களில் எழுதப்பட வேண்டும். மறு விபரங்களையும் அவரிடத்தில் அறிந்துகொள்ளலாம்.

G 99 5, 8



## ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

### நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, November, 5, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org